


சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக மாநாட்டுக் கூட்டரங்கில் நேற்று (29.05.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற "அறிஞர்கள் அவையம் நிகழ்வினைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (கூ.பொ.) கோபிநாத் ஸ்டாலின் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில்

# தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – மேயர் பிரியா – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி வழங்கினர்!

சென்னை, மே 30-

சென்னை, வியாசர்பாடி, சத்தியமூர்த்தி நகரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம். பெருநகர சென்னை மாநகராட்சி. 4வது மண்டலம், 37வது வார்டுக்குட்பட்ட வியாசர்பாடி, சத்தியமூர்த்தி நகரில் 26.05.2025 (திங்கட்கிழமை) அன்று மாலை 5.00 மணி அளவில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு நிலையங்களான வஉசி நகர், கொருக்குப்பேட்டை, வியாசர்பாடி, வன்னியம்பதி, பேசின் பிரிட்ஜ் எஸ்பிலனேடு மற்றும் கொளத்தூர் ஆகிய தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீ அணைக்கப்பட்டது. பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் மாநகராட்சி உயர் அலுவலர்கள், வருவாய்த்துறை, காவல்துறை, மின்சாரத் துறை மற்றும் பல்வேறு துறைகள் சார்பில் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர். இதனைத் தொடர்ந்து தீ விபத்து ஏற்பட்ட குடிசை பகுதிகளில் வசித்த மக்கள் அனைவரும் உடனடியாக அருகில் உள்ள உதயசூரியன் நகரில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளி வளாகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பத்திரமாக தங்க வைக்கப்பட்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி 27.05.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி பள்ளியில் தங்க வைக்கப்பட்ட நபர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

மேலும், அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் ஆகியோர் தீ விபத்து நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, உடனடி நிவாரணமாக பாதிக்கப்பட்ட 24 நபர்களுக்கு ரூபாய் 5000 ரொக்கம், 10 கிலோ அரிசி, துண்டு, லுங்கி, பக்கெட், மக். பாய் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி சார்பில் மருத்துவ முகாமும் நடைபெற்றது மற்றும் சம்பவ நாள் முதல் சென்னை மாநகராட்சியால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (29.05.2025) வியாசர்பாடி, சென்னை மாநகராட்சி பள்ளியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு சார்பில் ரூபாய் 8000 ரொக்கமும். 10 கிலோ அரிசி, வேஷ்டி, புடவையும் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ரூபாய் 42000 ரொக்கமும், 26 கிலோ அரிசி, பெட்ஷீட், புடவை, லுங்கி, இரவு உடை மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் ஜெ.டில்லிபாபு, பெரம்பூர் வட்டாட்சியர் உமா மகேஷ்வரி ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு – நாளை

# கலைஞரின் 'இளைஞன்' திரைப்படம் - இலவசமாக திரையிடல்!

### மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சாவூர் மே.30-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் 110 ஆண்டுகளுக்கு மேலாக .இயங்கி வரும் வாணி விலாச சபாவில் முத்தமிழறிஞர் கலைஞர் கைவண்ணத்தில் உருவான இளைஞன் திரைப்படம் இலவசமாக திரையிடப்பட உள்ளதாக மாவட்டச் செயலாளர் சு. கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கும்பகோணம் மாநகரில் கடந்த 110 ஆண்டுகளாக பல்வேறு இசை ஜாம்பவான்கள் தொடங்கி நமது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திய வாணி விலாச சபாவில் பன்முகத்தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாதம் தோறும் ஒருநாள் கலைஞர் அவர்கள் எழுதிய கதைவசனம் கொண்ட பழைய திரைப்படங்கள் திரையிடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது 12-வது படமாக நாளை 31.05.2025 சனிக்கிழமை காலை 11.00 மணி காட்சியும், மாலை 6.00 மணி காட்சியும் சபா கலையரங்கில் (விஜய லெட்சுமி திரையரங்கம்) கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி புகழ்பெற்ற ப.விஜய், மீரா ஜாஸ்மின், ரம்யா நம்பீசன், நாசர், வடிவேலு, கருணாஸ் நடித்த -கலைஞரின் "இளைஞன்" திரைப்படம் திரையிடப்படவுள்ளது. தாங்களும், தங்கள் குடும்பத்தினருடனும் வந்து கண்டு மகிழுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம் அனைவரும் வருக...

இவ்வாறு சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கு

# ஐந்தே மாதத்தில் வழக்கை முடிக்க துரிதப்படுத்திய முதல்வர்!

### விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பாராட்டு!



சென்னை, மே 30 -

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக் கழக மாணவி கற்பழிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டவர் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சம்பவம் நடந்த ஐந்து மாதத்தில் உரிய முறையில் வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணைகளை முடித்து, சம்பந்தப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி தான் என தீர்ப்பு வழங்கியிருப்பதன் மூலம் தமிழ்நாடு அரசும், காவல்துறையும் எவ்வளவு வேகமாக செயல் பட்டு இருக்கிறது என்பதற்கு ஒரு சாட்சியாகும்.

அண்ணா பல்கலைக் கழக மாணவி, ஞானசேகரன் என்பவரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட செய்தி நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கி, ஆளும் கட்சி மீது பழி சுமத்த பல்வேறு முயற்சிகளை எடுத்து அறிக்கைகளையும் விடுத்து வந்தது. இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் குற்றவாளி யாராக இருந்தாலும், எந்த கட்சியாக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி விரைந்து நடவடிக்கை எடுக்கும். அதற்கான ஏற்பாடுகளை காவல்துறை மேற்கொள்ளும் என சட்டப்பேரவையில் அறிவித்தார். அதற்கு ஏற்ப தற்போது ஐந்தே மாத காலத்தில் இந்த வழக்கை விசாரித்து தற்போது சம்பந்தப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி தான் என சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்து, வரும் இரண்டாம் தேதி தண்டனையை வழங்குகிறது. இவ்வளவு விரைவாக இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பளிப்ப தற்கு ஏதுவாக உரிய நடவடிக்கைகளை எடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு காவல்துறையை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மனமார பாராட்டுகிறது.

ஆனால் இப்போதும் கூட எதிர்க்கட்சிகளுக்கு அரசு நடவடிக்கையை பாராட்ட மனமில்லை. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் யாரை காப்பாற்றுவதற்காக இந்த விரைவான நடவடிக்கை என்று கேட்பது விசித்திரமாக உள்ளது. நடவடிக்கை காலதாமதமானால் ஏன் காலதாமதம் என கேட்கும் அதே வாய் தான் இப்போது யாரை காப்பாற்றுவதற்கு இந்த விரைந்த நடவடிக்கை என்று கேட்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் வழக்குகள் அதில் எவ்வளவு காலங்களில் அது முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையெல்லாம் அவர் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் அனைத்தையும் எடை போட்டு பார்க்கக் கூடியவர்கள். எனவே பெண்களை பாதுகாப்பதில், குற்றங்களை தடுப்பதில், குற்றவாளிகளை தண்டிப்பதில் தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் நடவடிக்கை மிகுந்த பாராட்டுகளுக்குரியது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு கூட்டம் ஒன்றியச் செயலாளரும், மாவட்ட ஊராட்சி தலைவருமான படப்பை ஆ.மனோகரன் தலைமையில் ஒன்றியக் குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் ஏ.மணி, ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு ரூ.ஐந்து லட்சம் மதிப்பீட்டில் நிர்வாகிகள் மற்றும் கிளை கழக செயலாளர்களுக்கு புத்தாடைகள் மற்றும் நிதி வழங்கப்பட்டது.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102–வது பிறந்த நாள் விழா

### மற்றும் கழக அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கி

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்டங்கள் - நலத்திட்ட உதவிகள் வழங்குதல்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



தமிழ்நாட்டிற்கும், கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும்,

தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமை மிகு சாதனையை படைத்து, 4 ஆண்டு நல்லாட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி, சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி – ஒன்றிய – நகர – பேரூர்களில் கீழ்க்காணும் சிறப்பு பேச்சாளர்களைக் கொண்டு தொடர் பொதுக்கூட்டங்கள், கருத்தரங்கம், பல்வேறு விளையாட்டு போட்டிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற உள்ளது. இப்பொதுக்கூட்டங்கள் நடைபெறும் போது, பொதுக்கூட்ட மேடையிலேயே ஏழை எளியவர்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

**மாபெரும் தொடர் பொதுக்கூட்டங்கள்**

| வ. எண் | நாள் | உரையாற்றும் சிறப்பு பேச்சாளர்கள் | ஏற்பாடு செய்யும் பகுதி/ ஒன்றியம்/ நகரம்/ பேரூர் |
|---|---|---|---|
| 1 | 4.6.2025 – புதன் | திண்டுக்கல் ஐ. லியோனி | திருப்பெரும்புதூர் பேரூர் |
| 2 | 6.6.2025 – வெள்ளி | தமிழன் பிரசன்னா<br>இளம் பேச்சாளர்:–<br>ரூ. கீர்த்தனா | செம்பாக்கம் வடக்கு பகுதி |
| 3 | 9.6.2025 – திங்கள் | அமைச்சர் கோவி. செழியன் | மாங்காடு நகரம் |
| 4 | 9.6.2025 – திங்கள் | சைதை சாதிக்<br>இளம் பேச்சாளர்:–<br>நா. அருண் | திருக்கழுக்குன்றம் பேரூர் |
| 5 | 10.6.2025 – செவ்வாய் | ஈரோடு இறைவன்<br>இளம் பேச்சாளர்:–<br>பம்மல் தினேஷ் | காட்டாங்கொளத்தூர் மத்திய ஒன்றியம் |
| 6 | 11.6.2025 – புதன் | தூத்துக்குடி சரத்பாலா<br>ஒப்பிலாமணி | செங்கப்பட்டு நகரம் |
| 7 | 12.6.2025 – வியாழன் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | பெருங்களத்தூர் தெற்கு பகுதி |
| 8 | 12.6.2025 – வியாழன் | ஆலந்தூர் மலர் மன்னன்<br>முரசொலி மூர்த்தி | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் |
| 9 | 13.6.2025 – வெள்ளி | கரூர் முரளி<br>அத்திப்பட்டு சாம்ராஜ் | பல்லாவரம் வடக்கு பகுதி |
| 10 | 13.6.2025 – வெள்ளி | சென்னை அரங்கநாதன்<br>செங்கை தாமஸ் | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் |
| 11 | 16.6.2025 – திங்கள் | முனைவர் சபாபதி மோகன்<br>செங்கை சந்தானம் | திருப்போரூர் பேரூர் |
| 12 | 16.6.2025 – திங்கள் | பவானி கண்ணன்<br>இளம் பேச்சாளர்:–<br>கா.பார்கவி | மறைமலை நகர் தெற்கு நகரம் |
| 13 | 17.6.2025 – செவ்வாய் | சேலம் சுஜாதா<br>நாகம்மை கருப்பையா | தாம்பரம் கிழக்கு பகுதி |
| 14 | 18.6.2025 – புதன் | நெல்லிக்குப்பம் புகழேந்தி<br>இளம் பேச்சாளர்:–<br>ரிஷி சந்தோஷ் | பம்மல் தெற்கு பகுதி |
| 15 | 18.6.2025 – புதன் | ஆரணி மாலா<br>குடியாத்தம் புவியரசி | காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியம் |
| 16 | 19.6.2025 – வியாழன் | தமிழன் பிரசன்னா<br>இளம் பேச்சாளர்:–<br>மா.பூபதி | தாம்பரம் மேற்கு பகுதி |
| 17 | 19.6.2025 – வியாழன் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி<br>தேரடி இந்திரகுமார் | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம் |
| 18 | 20.6.2025 – வெள்ளி | சைதை சாதிக்<br>இளம் பேச்சாளர்:–<br>அ.தா.டெக்சீன் ரொமேரியோ | பெருங்களத்தூர் வடக்கு பகுதி |
| 19 | 20.6.2025 – வெள்ளி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் |
| 20 | 22.6.2025 – ஞாயிறு | தேரடி இந்திரகுமார்<br>நா.அருண் | மாவட்ட இளைஞர் அணி |
| 21 | 23.6.2025 – திங்கள் | இரா.ராஜீவ்காந்தி<br>இளம் பேச்சாளர்:–<br>ஸ்ரீலேகா | மாவட்ட மாணவர் அணி |
| 22 | 23.6.2025 – திங்கள் | கந்திலி கரிகாலன்<br>பொன்னேரி சிவா | புனித தோமையர் மலை வடக்கு ஒன்றியம் |
| 23 | 24.6.2025 – செவ்வாய் | நாஞ்சில் சம்பத் | செம்பாக்கம் தெற்கு பகுதி |
| 24 | 25.6.2025 – புதன் | செந்தில்வேல் | குன்றத்தூர் நகரம் |
| 25 | 26.6.2025 வியாழன் | ம. சே. மதிவதனி<br>ரூ.கீர்த்தனா | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் |
| 26 | 27.6.2025 – வெள்ளி | கோவை நாகநந்தினி<br>இளம் பேச்சாளர்:–<br>மா. சிவரஞ்சனி | ஆலந்தூர் வடக்கு பகுதி |
| 27 | 28.6.2025 – சனி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி<br>ஈரோடு இறைவன் | ஆலந்தூர் தெற்கு பகுதி |
| 28 | 29.6.2025 – ஞாயிறு | அமைச்சர் கோவி. செழியன் | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் |
| 29 | 30.6.2025 – திங்கள் | திருச்சி சிவா | பம்மல் வடக்கு பகுதி |
| 30 | 1.7.2025 – செவ்வாய் | ஆரணி மாலா | கண்டோன்மென்ட் நகரம் |

எனவே, அந்தந்த மாநகர – பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் அமைப்பாளர்கள் மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இத்தொடர் பொதுக் கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய- நகர- பகுதி – பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து அவர்கள் அனைவரையும் தொடர் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கச் செய்து இக்கூட்ட மேடையிலேயே ஆங்காங்கு உள்ள ஏழை – எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் எழுச்சியோடு ஏற்பாடு செய்திடும்படி தங்களை அன்புடன்கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.